## உடல்தானம் வழங்க முன் வருபவரிடமிருந்து பெறப்படும் விருப்ப கடிதம்

அனுப்புதல்

பெயர் :

பிறந்த தேதி/வயது :

முகவரி :

பெறுதல்

முதல்வர் அவர்கள்,
அரசு மருத்துவக் கல்லூரி,
அரியலூர்.

ஐயா,

பொருள்: இறந்த பின் உடல் தானம் செய்வதற்கு விருப்பம் தெரிவித்தல் - தொடர்பாக.

*****

______________________________________________ பகுதியில் வசித்து வருகிற__________வயதுடைய நான் என்னுடைய இறப்பிற்கு பின்னர் என்னுடைய உடலை மருத்துவக்கல்லூரி மாணவர்களின் கல்வி நோக்கத்திற்காக அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரிக்கு நானே முன் வந்து தானம் அளிக்க விரும்புகிறேன்.

இந்த உடல் தானமானது என்னுடைய சொந்த விருப்பத்தின் பேரினால் மட்டுமேயன்றி இதில் யாதொரு கட்டாயமும் இல்லை என்று நான் இதனால் உறுதியளிக்கிறேன். நான் தெளிந்த மனதுடனும், செயல்பாட்டுடனும் இருக்கிறேன் என்றும் உறுதியளிக்கிறேன்.

எனக்கு ஹெப்படைடிஸ் / எச்.ஐ.வி / அல்லது யாதொரு ஏனைய தொற்று நோயுமில்லை என நான் உறுதியளிக்கிறேன்.

நான் எனது கண்களை (இறப்பிற்குபின் தானம் அளித்துள்ளேன் / தானம் அளிக்கவில்லை.

மேற்கொண்டு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றிய விபரங்களை அறியவும், அதன்படி உண்மையாக நடக்கவும் நான் விரும்புகிறேன்.

தேவையான நடைமுறைகளை நான் நிறைவு செய்வதற்கு ஏதுவாக தேவையான படிவங்களை வழங்குமாறு நான் தங்களிடம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றியுடன்

இடம் தங்கள் உண்மையுள்ள,

நாள்:

தகவல் தொடர்பிற்கான தொலைபேசி எண்கள்: 9486633913 / 9385832554

ஆதார் அட்டைநகல்

(இல்லையெனில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனுமொரு அடையாள அட்டை நகல்)

**உடன்தானம் வழங்குபவர் மற்றும் நெருங்கிய உறவினர்களுக்கான வழிகாட்டிக் குறிப்புகள் மற்றும் அறிவுரைகள்**

1. உடல்தானம் வழங்குபவர் இறந்தபின்னர், அவருடைய உடலைக்காலம் கடத்தாமல் (8 முதல் 24 மணிநேரத்திற்குள்) உடல்தானம் வழங்குவதற்காகப் பதிவு செய்துள்ள அரசு மருத்துவக்கல்லூரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

2. உடலை பயிற்றுவிக்கும் மருத்துவக்கல்லூரிக்கு கொண்டு செல்வதற்கு நிறுவனம் ஏற்பாடு செய்யும் வகையில் உடல்தானம் வழங்குபவர் இறந்த தகவலை அருகிலுள்ள பயிற்றுவிக்கும் மருத்துவக்கல்லூரி முதல்வர்/ இருப்பிட மருத்துவ அதிகாரிக்குத் தெரிவிக்குமாறு, சட்டப்படிக்கான வாரிசுகள் அல்லது நெருங்கிய உறவினர்கள் கேட்டுக் கொள்ளப்படலாம்.

3. இறப்பு ஏற்பட்டதற்கான காரணம் மற்றும் இறப்பு ஏற்பட்ட நேரத்தை தெளிவாகக் குறிப்பிடுகின்ற வகையில் தகுதி வாய்ந்த அதிகாரியால் அளிக்கப்பட்ட இறப்புச் சான்றிதழ் மேற்சொன்ன உடலுடன் சேர்த்து அனுப்பி வைக்கப்படவேண்டும்.

4. உடல்கூறு இயல் துறையில் அனைத்து வேலை நாள்களிலும் காலை 8.00 மணிமுதல் மாலை 3.30 மணிவரையில் உடல் பெற்றுக் கொள்ளப்படும். பணி நேரம் அல்லாத பிற நேரங்களிலும் விடுமுறை நாள்களிலும் இருப்பிட மருத்துவ அதிகாரியிடம் கேட்டுக் கொள்வதன் பேரில் மருத்துவமனையின் பிணவறையில் உடல் வைக்கப்படும்.

5. இறப்பு இயற்கையான முறையில் அல்லது இயற்கையில் ஏற்படுகிற நோயினால் ஏற்பட்டிருக்க வேண்டும்.

6. மருத்துவம் சார்ந்த சட்டப் பிரச்சனைகள், தற்கொலை, நஞ்சு அருந்தியதால் ஏற்பட்ட இறப்பு ஆகிய நேர்வுகளில் உடல் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.